ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1437/25 - 2006 මාර්තු 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2006.03.23

*1437/25 ஆம் இலக்கம் - 2006 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 2/ 2006.*

**2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்**

6 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடற் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (அ) என்னும் பந்தியால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, மேற்கூறப்பட்ட சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் பணத்தில் ஐந்து இலட்சம் ரூபா (ரூபா 5,00,000) அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்கச் சமமான தொகை வரையிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கலை நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதல் வேண்டும் என இக்கட்டளை மூலம் தீர்மானிக்கின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2006, மாச்சு 23.*

---

*ச. வ. பி. 2/ 2006.*

**2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டம்**

*2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடற் சட்டத்தின் 29ஆம் பிரிவுடனும் அரசிலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய மேற்கூறப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதியால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*கொழும்பு,*
*2006, மாச்சு 23 .*

ஒழுங்குவிதிகள்

*1.* இவ்வொழுங்குவிதிகள் 2006 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் ஒழுங்குவிதி என எடுத்துக்காட்டப்படலாம்.

*2.* 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 6 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி, வாடிக்கையாளர் ஒருவரின் வேண்டுகோளின்பேரில் இலத்திரணியல் நிதிக்கைமாற்றுதல் ஒவ்வொன்றையும் அத்தகைய கைமாற்றுதலின் தொகை ஐந்து இலட்சம் ரூபாவை (ரூபா 5,00,000) அல்லது ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுகின்றவிடத்து, நிதிசார் உளவறிதற் கூறுக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.